தேர்தல் விசேட பதிப்பு

விலை: 10/=

செய்வது துணிந்து செய் சொல்வது தெளிந்து சொல்

# நமது முரசொலி

நமது முரசொலி Namathu Murasoly

வார இதழ்

முரசு - 01 (22.09.2013) திருவள்ளுவர் ஆண்டு: 2044 முழக்கம் - 04



# மாகாண அரசுக்கு மக்கள் ஆணை



**பிராந்திய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் அதிகம் கவனம் கொடுக்கப்பட்ட வடக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றியது. 38 ஆசனங்களைகன் கொண்ட வடக்கு மாகாணசபையில் 30 ஆசனங்களை தனதாக்கி மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமாகப் பெற்று அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது கூட்டமைப்பு. முள்ளிவாய்க்காலில் முடிந்து போன தமிழர்களின் ஆயுதப்போராட்டம் இராஜதந்திரப்போராக உருவெடுத்து விஸ்வரூப வெற்றி பெற்றுள்ளது. என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.**

எங்கு போர்முடிந்து, தமிழர்கள் தோற்றுப் போன இனம் என எதிர்த்தரப்பு மார்தட்டியதோ அதே முல்லைத்தீவின் மாவட்ட தேர்தல் முடிவுகளே முதலில் வெளியிடப்பட்டு தமிழர் வெற்றி உறுதிசெய்யப்பட்டமை மீண்டும் தொடங்கும் மிடுக்கென தமிழர் விடுதலைப் போராட்டத்துக்கு புது உத்வேகத்தை கொடுத்துள்ளது. முல்லைத்தீவு மாவட்ட தபால் மூல வாக்களிப்பு முடிவுகள் முதலில் இரவு 8 மணிக்கு வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட முடிவுகள் அனைத்துமே கூட்டமைப்புக்கு அமோக வெற்றியை... [4ம் பக்கம் பார்க்க]

## தேர்தல் வெற்றி பற்றி



சி.வி.விக்கினேஸ்வரன், இரா.சம்பந்தன் கருத்து

வட மாகாண மக்கள் தம்மிடம் பெரும் பொறுப்பை கையளித்துள்ளதாக வட மாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை வேட்பாளரான சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார். மாகாண சபைத் தேர்தல் முடிவுகள்... [4ம் பக்கம் பார்க்க]

## யாழ் ஆயர் ஓய்வுபெறுகின்றார்



யாழ் மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்ட ஆயர் பணியிலிருந்து ஓய்வு பெற விண்ணப்பித்துள்ளார். மன்னார் மற்றும் யாழ்ப்பாண மறை மாவட்டங்களில் ஆயராக இருந்து கிறிஸ்தவ சமய மக்களை சமயசெல்நெறியில் மிக நேர்த்தியாக வழிநடத்திய ஆன்மீக தலைவராகவுள்ளார் நெருக்கடிமிக்க கால கட்டத்தில் ஆயராகப் பொறுப்பேற்ற இவர் பல்வேறு இடர்களிற்கும் முகங்கொடுத்தவராக தன் ஆன்மீகப் பணியை முன்னெடுத்துள்ளார். சமய சமூக அரசியல் செயற்பாடுகளில் முன்னுதாரணமாக செயற்பட்ட ஆயர் பல்வேறு நிலைகளில் மக்கள் சார் நல்களிலும் அரசியல் சார் நிலைப்பாட்டடை வலியுறுத்துபவராகவும் தன்னிலை வகுத்துள்ளார்... [4ம் பக்கம் பார்க்க]

## தேர்தல் முடிவுகள்

நடந்து முடிந்த வடமாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்றவர்களின் விபரங்களும் கட்சி ரீதியாக பெற்ற வாக்குகளின் விபரங்களும் வருமாறு...

யாழ் மாவட்டம்

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | - 213907- 14 |
| ஐக்கியமக்கள் சுதந்திர கூட்டமைப்பு | - 35995 - 2 |

கிளிநொச்சி மாவட்டம்

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | - 37079 - 3 |
| ஐக்கியமக்கள் சுதந்திர கூட்டமைப்பு | - 7897 - 1 |

வவுனியா மாவட்டம்

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | - 41225 - 4 |
| ஐக்கியமக்கள் சுதந்திர கூட்டமைப்பு | - 16633 - 2 |

முல்லைத்தீவு மாவட்டம்

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | - 28266 - 4 |
| ஐக்கியமக்கள் சுதந்திர கூட்டமைப்பு | - 7209 - 1 |

மன்னார் மாவட்டம்

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | - 33118 - 3 |
| ஐக்கியமக்கள் சுதந்திர கூட்டமைப்பு | - 15104 - 1 |
| ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் | - 4571 - 1 |

### விருப்பு வாக்கு விபரம்

யாழ் மாவட்டம்

இ.த.க

| | | |
|---|---|---|
| 1. | சீ.வி.விக்கினேஸ்வரன் | 132 252 |
| 2. | அனந்தி சசிதரன் | 87870 |
| 3. | த.சித்தார்தன் | 39715 |
| 4. | இ.ஆனல்ட் | 26888 |
| 5. | சி.வி.கே.சிவஞானம் | 26747 |
| 6. | பா.கஜதீபன் | 23669 |
| 7. | எம்.கே.சிவாஜிலிங்கம் | 23660 |
| 8. | பொ.ஐங்கரநேசன் | 22268 |
| 9. | எஸ்.சுகிர்தன் | 20541 |
| 10. | கே.சயந்தன் | 20179 |
| 11. | விந்தன் கனகரட்ணம் | 16463 |
| 12. | அ.பரஞ்சோதி | 16761 |
| 13. | க.சர்வேஸ்வரன் | 14359 |
| 14. | சி.சிவயோகன் | 13479 |

ஐ.ம.சு.கூ


கமலேஸ்வரன்

அங்கஜன்

[4ம் பக்கம் பார்க்க]

## முதலமைச்சருக்கு முரசொலியின் வாழ்த்துக்கள்

விக்கினங்கள் சுமந்து வில்லங்கப்பட்ட இன விலங்கு அறுப்பாய்
விக்கினேஸ்வரா என விழி நிறைய நம்பிக்கை சுமக்கின்றோம்!
பக்குவமாய் எங்கள் நிலை பாருக்குச் சொல்லியே திட்டமாய்
மக்கள் எல்லாம் ஏற்கும் தீர்வொன்று அமைப்பாய் நம்புகின்றோம்!
ஆண்ட தமிழர் மண்ணில் மீண்டும் அரசேறுகிறாய் முதலமைச்சராய்
பூண்ட சபதங்கள் முடிக்க மாண்டவர் கனவு பலிக்க வைப்பாய்!
பக்கத்து துணையாக முப்பதைக் கேட்டாய் தயங்காமல் தந்தோம்
பக்கத்து வீட்டு தமிழ் உறவுகளையும் பகைக்காமல் பார்த்துக்கொள்!
திக்கெட்டும் சிதறி நின்ற தமிழர்கள் சிரிக்கின்றார் உன் வரவால்
சிக்கல் ஏதுமின்றி அவர் கரத்தையும் இறுகப் பற்றுவாய் நிமிர்வாய்!
பதின்மூன்று ஆகுமா ஆகாதா, வேகுமா வேகாதா விளங்காதெமக்கு
"பத்து" நன்றாக ஆளும் நம்பிக்கை கொண்டு பின்னே நிற்கின்றோம்!
முத்தான முதலமைச்சராய் வடக்கின் முதல்படி ஏறுபவனே உன்னை
சொத்தாக நினைக்கின்றோம் சேரிடம் சிறப்பாய் கூட்டிச் செல்வாய்!



ஆசிரிய குழாம்
நமது முரசொலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் விசேட பதிப்பு
நமது
செய்வது துணிந்து செய் சொல்வது தெளிந்து சொல்
முரசொலி
නමදු මුරසොලි Namathu Murasoly
வார இதழ்
முரசு - 01 (22.09.2013) திருவள்ளுவர் ஆண்டு: 2044 முழக்கம் - 04
இல : 18/1 இளையதம்பி ஒழுங்கை, செம்மணி வீதி, நல்லூர்
E-mail : namathumurasoli@gmail.com, Tel : 0773673829

## மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளிப்போம்

வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடந்து முடிந்துள்ளது. மக்கள் தம் மனங்களின் உணர்வுகளின் பதிலாக ஜனநாயக முறையில் தம் தீர்வை அளித்துள்ளார்கள். என்றுமில்லாத மக்கள் பங்களிப்புகளை பரிசாகப் பெற்று வெற்றியீட்டிய வேட்பாளர்கள், கட்சிகள் யாவர்க்கும் வாழ்த்துக்களைக் கூறுகிறோம். மக்களின் மன உணர்வுக்கு மதிப்பளித்து வெற்றி தோல்விகளை மக்கள் தீர்ப்பாக ஏற்றுக்கொள்வோம்.

பல்வேறு சவால்கள், பிரசாரங்கள், பொய்மையான வாக்குறுதிகள், உரிமை கோரல்கள், கட்டாயப்படுத்தல்கள், வன்முறைச் செயல்கள், குழப்ப சூட்சியிலான பிரசுரங்கள், வதந்திகள், தவறான வழிகாட்டல்கள், இளையோரைத் திசை திருப்பும், அடிமையாக்கும் குடிபோதைப் பழக்க வழக்கங்கள் நம்பிக்கை மோசடிகள், நம்பகமற்ற வேட்பாளர்கள், நடமாட்டங்கள் துஸ்பிரயோகங்கள், மிரட்டல்கள், துப்பாக்கிப் பிரயோகங்கள் என அனைத்தும் நடந்து முடிந்தவையாகட்டும்.

இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் மக்களின் தீர்ப்புக்கு அனைவரும் மதிப்பளிப்போம். மக்கள் துயர்தீர்க்கும், அவர்கள் மனங்களை வெல்லும் பணிகளில் ஒன்றினைந்து இனி செயல்படுவோம். வீண்குரோதங்கள், பகைகளை கழைவதில் பெருந்தனமாக நடந்து கொள்வோம். வெற்றி என்று மமதை கொள்ளாது , தோல்வி என்று துவண்டும் போகாது மக்களின் மன உணர்வை மதித்து செயல்பட அனைவரும் ஒன்றினைவோம். ஓர் அணியாக செயலின் பங்காளர்களாவோம். பணிகளில் பங்களிப்போம். தவறுகளைச் சுட்டிக்காட்டித் தீர்வுகாண்போம். தவறுவது மனித இயல்பு அதனை உணர்ந்து நல்லவையே இனி நடைபெற நாம் கரங்கோப்போம். எதிர்க்கட்சிகளை எதிரிகளாகப் பார்க்காது, போலிகளைக் கூலிகளாக்கி வேலிகளாக்க முயல்வோரை இனம் கண்டு முகத்திரையை அகற்றி நல்லவர்களாக்கி நமது மண்ணைப் புனிதமாக்க வெற்றிபெற்றவர்களை முன்மாதிரிகளாகத் திகழ வேண்டும்.

குத்துக்கரண அரசியலில் ஈடுபட வைப்போரின் சூட்சி வலைகளைக் கண்காணிப்போம். அவர்கள் முகவரி இழந்ததனை முன்னுதாரணங்களாக்கி, பற்றுள்ளோர்களின் பணி சிறக்க வாக்களித்தோரே வழிகாட்ட முன் வாருங்கள். கூடித் திட்டமிடுங்கள். ஒற்றுமையின் பலத்தை வாக்குகளால் மட்டுமல்ல வன்முறையற்ற செயலாலும் பங்களிப்பாலும் காட்ட வாருங்கள்.

இதனை முன்னுதாரணமான மக்கள் பலமாக்குவோம் இது இலகுவில் பெற்ற வெற்றியல்ல ஏமாற்றி பெற்ற வெற்றியும் அல்ல. பலரது அர்ப்பணிப்புக்களின் பிரதி பலனே இது. பல்தேச உறவுகளின் எதிர்பார்ப்பும் பங்கேற்பும் பலம் கொண்ட மக்கள் தீர்ப்புக்கு நாம் அளிக்கும் மதிப்பும், அர்ப்பணிப்பும், அனைவரது அயராத உழைப்பும் தமிழினத்தின் வெற்றி முரசொலியாகட்டும்.

**தேர்தல் பற்றிய விரிவான தகவல்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகளை வார முரசொலியில் எதிர்பாருங்கள்**

# இனி ராஜதந்திரப் போரா?

—— நிலாந்தன்

இக்கட்டுரை வாசிக்கப்படும்போது தேர்தல் முடிவுகள் அநேகமாகக் கிடைத்திருக்கும். கூட்டமைப்பிற்கே வெற்றி கிடைக்கும் என்ற எடுகோளின் மீதே இக்கட்டுரை எழுதப்படுகின்றது. அப்படியொரு வெற்றி கிடைத்தால் தாங்கள் இரண்டு தளங்களில் போராடப் போவதாக அவர்கள் வாக்குறுதியளித்திருக்கின்றார்கள். முதல் தளம் உள்நாட்டில், ஆளுநரின் அதிகாரங்களிற்கு எதிரானது என்றும், மற்றைய தளம் அனைத்துலக அரங்கில் ஒரு ராஜதந்திரப் போர் என்றும் அவர்கள் மக்களுக்கு வாக்குறுதியளித்திருக்கிறார்கள். ராஜதந்திரப் போர் என்பதை கூட்டமைப்பு ஒரு பிரசார உத்தியாகப் பாவிக்கின்றதா? இல்லையா என்பது பற்றி உரையாடுவது இக்கட்டுரையின் நோக்கமல்ல. மாறாக, இப்பொழுது தமிழ் அரசியலைப் பொறுத்த வரை ராஜதந்திர வழிமுறைக்குள்ள முக்கியத்துவம் பற்றி உரையாடுவதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

கூட்டமைப்பு மட்டுமல்ல, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அப்படித்தான் கூறுகிறது. டயஸ்பொறாவில் உள்ள நாடு கடந்த தமிழீழ அரசும் உட்பட ஏனைய எல்லா அழுத்தக் குழுக்களும் லொபிக் குழுக்களும், நொதியக் குழுக்களும், தமிழ் நாட்டிலுள்ள தமிழ்த்தேசிய சக்திகளும் அவ்வாறு தான் கூறி வருகின்றன. விடுதலைப்புலிகளின் வீழ்ச்சிக்குப் பின் முழு ஈழத்தமிழ்ச் சமூகமும் ஒரே திசையில் சிந்திக்கும் மிக அரிதான விவகாரங்களில் இதுவும் ஒன்றெனலாம். இது விசயத்தில் களமும், புலமும் ஒரே விதமாகத்தான் சிந்திக்கின்றன. இதை இன்னும் சரியாகச் சொன்னால் புலிகள் இயக்கத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஈழத்தமிழர் அரசியல் அரங்கில் அதிகம் அழுத்தம் பெற்றுவரும் ஒரு செய்முறை இதுவெனலாம்.

ஆனால், அதன் அர்த்தம் புலிகள் இயக்கத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர்தான் அதற்கான தேவை திடீரென்று தோன்றியது என்பது அல்ல. அது புலிகள் இயக்கத்தின் வீழ்ச்சிக்கு முன்னரே இருந்தது. குறிப்பாக, எப்பொழுது ரணில் - பிரபா உடன்படிக்கை உருவாகியதோ அப்பொழுதே அதற்கான முன்னெப்பொழுதையும் விட அதிகரித்த தேவைகளும் உருவாகிவிட்டன. அனைத்துலக அரங்கில் காய்களை நகர்த்தாமல் தமிழ் அரசியலை அதன் அடுத்த கட்ட வளர்ச்சிக்குக் கொண்டுபோக முடியாது என்றதொரு நிலை தோன்றியது. ஆனால், விடுதலைப்புலிகள் இயக்கம் ராஜீய சதுரங்கத்தில் காய்களை நகர்த்துவதற்குப் பதிலாக யுத்த களத்தில் படையணிகளை நகர்த்துவதற்கே முன்னுரிமை கொடுத்தது. இத்தகைய பொருள்படக் கூறின் ராஜதந்திரப் பொறிமுறைகளில் புலிகள் இயக்கம் போதிய வெற்றி பெறத் தவறியதும், அந்த இயக்கத்தின் வீழ்ச்சிக்குரிய பிரதான காரணம் எனலாம். இதை இன்னும் ஆழமாகப் பார்க்கலாம்.

ரணில் - பிரபா உடன்படிக்கை எனப்படுவது ஒரு துருவ உலக ஒழுங்கின் குழந்தை. தமது படைத்துறைச் சாதனைகள் மூலம் தமக்குச் சாதகமான ஒரு வலுச் சமநிலையை ஸ்தாபித்த விடுதலைப்புலிகள் உள்நாட்டில் பலமானதொரு நிலையில் இருந்தபோது அந்த உடன்படிக்கை செய்யப்பட்டது. அதேசமயம், யுத்தத்தில் பின்னடைவுக்குள்ளாகி நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியுற்ற திருமதி சந்திரிகாவின் அரசாங்கமானது ஒப்பீட்டளவில் பலவீனமடைந்திருந்தது. ஜனாதிபதியாக திருமதி சந்திரிகா இருக்கத்தக்கதாக பிரதமராக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டதால் அந்நாட்களில விமர்சகர்கள் வர்ணித்ததுபோல அது ஓர் இரட்டை ஆட்சியாக இருந்தது. இந்த இரட்டை ஆட்சி முறைக்குள் சுழித்துக் கொண்டு உருவாக்கப்பட்டதே ரணில் - பிரபா உடன்படிக்கையாகும். அதாவது, உள்நாட்டில் இரட்டை ஆட்சி காரணமாக, பலவீனமாகக் காணப்பட்ட அதேசமயம், அனைத்துலக அரங்கில் தனது மேற்கத்தேய விசுவாசம் காரணமாக ஒப்பீட்டளவில் பலமாகக் காணப்பட்ட யு.என்.பி.அரசாங்கத்திற்கும், உள்நாட்டில் யுத்த கள வெற்றிகள் மூலம் பலமாகக் காணப்பட்ட அதேசமயம், பிராந்திய மற்றும் அனைத்துலக அரங்கில் ஒப்பீட்டளவில் பலவீனமாகக் காணப்பட்ட புலிகள் இயக்கத்திற்கும் இடையில் செய்யப்பட்டதே அந்த உடன்படிக்கை.

அந்த உடன்படிக்கை மூலம் அனைத்துலக அரங்கில் தமக்குரிய அங்கீகாரத்தை மேலும் அதிகரிக்க முடியும் என்று தொடக்கத்தில் புலிகள் இயக்கம் நம்பியது. தம்மை அரசு அல்லாத ஒரு சமதரப்பாகவும் அது கருதியது. ஆனால், ஒஸ்லோப் பிரகடனத்தின் மூலம் அந்த உடன்படிக்கை ஒரு தர்மர் பொறியோ என்ற சந்தேகம் அந்த இயக்கத்துக்குத் தோன்றியது. அதோடு, கிழக்கில் ஏற்பட்ட உடைவும், சமாதானத்தின் மீதான அவநம்பிக்கைகளை கூட்டியது. உடன்படிக்கை உருவாகிய பின்னரும் அந்த இயக்கத்தின் மீதான தடையை எல்லா நாடுகளும் தொடர்ந்தும் பேணிவந்த ஓர் சூழ்நிலையில் வொஷிங்டன் மாநாட்டில் பங்குபற்றுவதற்கு அந்தத் தடை காரணமாகவே அனுமதி மறுக்கப்பட்டபோது புலிகள் இயக்கம் அனைத்துலக ராஜதந்திர நகர்வுகளில் பெருமளவிற்கு நம்பிக்கையிழக்கத் தொடங்கியது.

இவற்றுடன் சுனாமிக் கட்டமைப்பைப் போன்ற ஒரு கட்டமைப்பைக்கூட உருவாக்க முடியாத ஒரு சமாதானப் பொறிமுறையைத் தொடர்வதைவிடவும், யுத்த அரங்கைத் திறந்து தமது பேரம்பேசும் சக்தியை மேலும் அதிகரித்துக் கொண்டு அடுத்த கட்டத்தைப் பற்றிச் சிந்திக்கலாம் என்றதொரு முடிவை அவ்வியக்கம் எடுத்தது. ரணிலைத் தோற்கடித்ததின் மூலம் விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதான அரங்கை மூடி யுத்த அரங்கை திறந்தது எனலாம். அல்லது இன்னொரு விதமாகச் சொன்னால் ராஜதந்திர அரங்கை மூடி யுத்த அரங்கைத் திறந்தது எனலாம். யுத்த அரங்கைத் திறக்கக்கூடாது என்று அன்ரன் பாலசிங்கம் வாதிட்டதாக ஒரு தகவல் உண்டு. பொங்கு தமிழ் போன்ற சிவில் எழுச்சிகள் மற்றும் ராஜதந்திர நகர்வுகளிற்கூடாக நிலைமைகளைக் கையாளலாம் என்றும் அவர் நம்பியதாகக் கூறப்படுகின்றது. ஆனால், படைத்துறை நகர்வுகளை ஆதரிப்பவர்களின் கையே மேலோங்கியபோது அதன் தர்க்கபூர்வ விளைவாக ராஜதந்திர வழிமுறைகள் தேக்கமடைந்தன. தன்முயற்சிகளில் வெற்றிபெறாதவராக அன்ரன் பாலசிங்கம் நிராசையோடு இறந்துபோனார்.

அனைத்துலக அரங்கில் ராஜதந்திரக் காய்களை நகர்த்துவதற்குப் பதிலாக உள்நாட்டில் படையணிகளை நகர்த்துவது என்று விடுதலைப்புலிகள் இயக்கம் முடிவெடுத்தது. பாலசிங்கம் முன்னுணர்ந்ததைப் போலவும், அப்போதிருந்த அமெரிக்கத் தூதுவரான ஜெவ்ரி லுன்ஸ்ரெற் (Jeffrey Lunstead) எச்சரித்திருந்தது போலவும் ஏறக்குறை முழு உலகமும் புலிகள் இயக்கத்தைச் சுற்றிவளைத்துத் தோற்கடித்தது. ஆனால், அந்த இயக்கம் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் ஈழத்தமிழ் அரசியல் எனப்படுவது அனைத்துலக அரங்கிலேயே அதிகம் கையாளப்பட வேண்டிய ஒன்றாக தொடர்ந்தும் காணப்படுகின்றது.

வெற்றிவாதத்திற்குத் தலைமை தாங்கும் இலங்கை அரசாங்கமானது உள்நாட்டில் மிகப்பலமானதாகக் காணப்படுகின்றது. அதேசமயம் பிராந்திய அளவில் ஓரளவுக்கு பேரம்பேசும் சக்தியுடன் காணப்படுகிறது. ஆனால் அது, ஒரு ஆபத்தான கயிறிழுத்தல் போட்டியால் உருவாகிய ஒரு பேரம் பேசும் சக்தியாகும் அதாவது, சீனாவுக்கும் - இந்தியாவுக்கும் இடையிலான ஒரு பனிப்போர் களத்தை இச் சிறு தீவில் திறந்து வைத்திருப்பதாற் கிடைத்த பேரசும்பேசும் சக்தியே அது. அதேசமயம் அனைத்துலக அரங்கில் இந்த அரசாங்கம் ஒப்பீட்டளவில் பலவீனமானதாகக் காணப்படுகிறது. மறுவளமாகத் தமிழர்களைப் பொறுத்தவரை தோற்கடிக்கப்பட்ட ஒரு தரப்பு என்பதால் உள்நாட்டில் தமிழர்களின் நிலை ஒப்பீட்டளவில் பலவீனமானதாகக் காணப்படுகிறது. ஆனால், அதேசமயம் பிராந்திய மற்றும் அனைத்துலக அரங்கில் தமிழ்த் தரப்பு ஒப்பீட்டளவிற் பலமாகக் காணப்படுகிறது. புலிகள் இயக்கத்தின் வீழ்ச்சிக்குப் பின் அனைத்துலக சமூகத்திடம் நிதி கோரி நிற்கும் ஒரு சமுகமாக தமிழர்கள் மாறியிருக்கின்றார்கள். மேலும் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின் கடந்த நான்காண்டுகளாகத் தமிழர்கள் மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் எதுவும் கிடையாது என்பதும் அத்தகைய எல்லாக் குற்றச்சாட்டுக்களும் அரசாங்கத்தின் மீதே வைக்கப்படுகின்றன என்பதும் தமிழர்களுக்கு ஒரு பிளஸ்தான். எனவே, யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட விதம் காரணமாகவும், இலங்கை அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கை காரணமாகவும் பிராந்திய மற்றும் அனைத்துலக அரங்கில் தமிழர்களின் பேரசும் பேசும் சக்தி அதிகரித்துள்ளது... [3ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் தோல்வியடைந்த வேட்பாளர்களுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களும் இடையில் மோதல்

வவுனியா கச்சேரிக்கு அருகில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை சேர்ந்த இரண்டு தரப்பினருக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அணி ஒன்றுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. இந்த மோதல் நிலைமை அதிகரித்து வருவதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான றிசார்த் பதியூதீனின் தேர்தலில் தோல்வியடைந்த வேட்பாளர்களுக்கும் முஸ்லிம் காங்கிரசின் ஆதரவாளர்களுக்கும் இடையில் இந்த மோதல் ஏற்பட்டுள்ளது. நேற்றிரவு முழுவதும் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்ட கபே அமைப்பின் கண்காணிப்பாளர்களையும் ஊடகவியலாளர்களை தாக்குதலில் ஈடுபட்டவர்கள் துரத்த முயற்சித்தனர்.

தாக்குதலில் ஈடுபட்டவர்கள் கண்மூடித்தனமாக தம்மை தாக்கி கொண்டதாக தேர்தல் கண்காணிப்பாளர் ஒருவர் தெரிவித்தார். இந்த சம்பவத்தில் காயமடைந்த 6 பேர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தேர்தல் பிரசார நேரத்திலும் தேர்தல் நடத்த போதும் நடைபெற்ற பின்னரும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தாக்குதலுக்கு உள்ளானதாக கபே அமைப்பு கூறியுள்ளது

# தேர்தல் வெற்றி பற்றிய வியப்புக்களும் கருத்துக்களும்

“கிளிநொச்சி வரை ரயில் விட்டா ஏறிப்போறாங்க,500 ரூபாய் காசு கொடுத்தாலும் வாங்கிறாங்க மெட்ராஸ் கபே படத்தை இலவசமாக் காட்டினாலும் பாக்கிறாங்க ,ஆனா ஓட்டை மட்டும் வீட்டுக்கு ஏறி இருந்து குத்துறாங்க,இவங்களைப் புரிஞ்சுக்க முடியலையே புத்தா”

**அருளினியன்**
**இந்தியா**

அமெரிக்காவும் தராது. ஜெனீவாவும் தராது....... எங்கள் உறவுகள் தமிழ் தேசிய கூட்டமைப்பை நம்பி வாக்களித்தார்களோ என்று என்னால் சொல்ல முடியலை... ஆனா தினம் தினம் எங்கள் இனம் அழிந்து கொண்டிப்பதை நாங்கள் எல்லோரும் உணர்ந்து விட்டோம் என்பதை வெளிக்காட்டியிருக்கின்றார்கள்... வெற்றியைக் கொண்டாடலாம் தான் இருபினும் நாம் இன்னும் பல தூரம் பணயம் செய்ய வேண்டி இருக்கின்றது.... நாம் ஒற்றுமையாக இருக்கின்றோம் என்று சொல்லி விட்டோம்... எங்கோ தூரத்தில் இருக்கும் ஆத்மாவே....... என்ன யோசனை.....

**அரிகரன்**
**பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர்**

விக்கினேஸ்வரன் ஐயாவின் சொல்லுக்கு எம் தமிழர் கட்டுப்பட்டு அவர் மேடைகள் தோறும் கேட்ட 30 ஆசனங்களை பெற்றுக்கொடுத்திருக்கின்றார்கள். அதற்கு கைமாறாக இராஜதந்திரப்போரை அவர் வெற்றியை நோக்கி நகர்த்தித் தரவேண்டுமென்பது அத்தனை தமிழர்களினதும் வேண்டு கோளாகும்..

**சர்வேஸ்**
**பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் செயலாளர்**

வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு அமோகவெற்றி 30ஆசனங்களை கைப்பற்றியது வரலாறு காணாத மாபெரும் வெற்றி. தமிழ் மக்களின் மாபெரும் எழுர்ச்சியை இந்த தேர்தல் உலக அரங்கிற்க்கு வெளிக்காட்டியுள்ளது..

**இசையாளர் கந்தப்பு ஜெயந்தன்**
**வவுனியா**

நடைபெற்று முடிந்தது தனிநாட்டிற்கான வாக்கெடுப்பு இல்லை. சமஸ்டி அடிப்படையிலான தீர்வுக்கான மக்கள் ஆணையே ஆகும். “நாங்கள் பிரிவினை கேட்கவில்லை, ஒரே நாட்டிற்குள் முஸ்லிம்களும் ஏற்கக்கூடிய சமஸ்டி அடிப்படையிலான தீர்வு ஒன்றையே கேட்கிறோம்” என்று கூட்டமைப்பு தனது பிரச்சாரத்தில் தெளிவாக கூறியிருந்தது. ஊரைக்குழப்பாமல் அனைவரும் தெளிவாக இருப்பதே புத்திசாலித்தனம்.

**வின்சன் ஞானதயாளன்**
**யாழ்ப்பாணம்**

நீண்ட இரவுகளுக்குப் பின் இன்றுதான் ஒரு சிறப்பான காலை விடிவை உணர முடிகின்றது.இன்று விடிந்தது பொழுது மட்டுமல்ல தமிழர்களின் எதிர்காலமும் தான் .இன்று என் மனதில் ஒரு இனம்புரியாத வெற்றி களிப்பு.இன்று காலையில் நான் சந்தித்த தமிழர்கள் எல்லோரின் முகத்திலும் ஒருவிதமான திமிருடன் கூடிய புன்னகை காணப்பட்டது .அந்த திமிர் ”எங்களை யாரும் அடக்கியாள முடியாது” என்றே அர்த்தப்பட வைக்கிறது . இதை நான் திமிருடன் சொல்லவில்லை,ஒரு சின்ன ஆணவத்துடன் தான் சொல்கிறேன் ”நான் ஒரு தமிழன்” தமிழ்மக்கள் உரிமையா? சலுகையா? எதற்கு முன்னுரிமை கொடுக்கின்றார்கள் என்பதனை நிரூபித்து விட்டனர்....

**பொருளியல் ஆசிரியர் வரதராஜன்**

தமிழன் விலைபோகாமல் இருந்து தமிழர்களின் கண்ணீரைக் அகற்றுங்கள் உடனடியாக போதைப்பொருள் கலாசார சீர்கேடு என்பவற்றை இல்லாது ஒழித்து கல்வி நிலையை உயர்த்துங்கள் தயவு செய்து நிவாரணம் என்ற பெயரில் மக்களைச் சோம்போறி ஆக்காமல் சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுங்கள். கடன் உதவிகளை வழங்கி எமது மக்களை அசமந்த போக்கில் இருந்து விழிப்படையச் செய்யுங்கள் இனி தமிழன் தமிழினத்தை ஆளவேண்டும் எப்படி ஓட்டுக் கேட்டோமா அப்படி மக்களோடு மக்களாக இருக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்கிறார்கள்

**பிரதீஸ் கணேஸ்**

[4ம் பக்கம் பார்க்க]

### இனி ராஜதந்திரப்...

இது ரணில் - பிரபா உடன்படிக்கை காலத்தில் காணப்பட்ட நிலைமைகளோடு ஒப்பிடுகையில் ஒருவித தலைகீழ்ச் சமன்பாடாகும். அதாவது உள்நாட்டில் மிகப் பலமாயிருக்கும் அதேசமயம் அனைத்துலக அரங்கில் பலவீனமாகக் காணப்படும் அரசாங்கமும், மறுபக்கத்தில், உள்நாட்டில் பலவீனமாகக் காணப்படும் அதேசமயம், அனைத்துலக அரங்கில் பலமாகக் காணப்படும் தமிழ்த் தரப்பும். இப்படிப் பார்த்தால் புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னரான அனைத்துலக அரங்கில் தமிழர்களின் நிலைமை ஒப்பீட்டளவில் பலமாகக் காணப்படுகிறது எனலாம். எனவே, தான் பலமாகக் காணப்படுகின்ற அதேசமயம், அரசாங்கம் பலவீனமாகக் காணப்படும் ஓர் அரங்கில்தான் தமிழ்த் தரப்பு வெற்றிகரமாகக் காய்களை நகர்த்த வேண்டியிருக்கின்றது.

அனைத்துலக அரங்கில் இப்பொழுது காணப்படுவது அதிகபட்சம் ஓர் அனுதாப அலைதான். அது அறநெறி, நீதியுணர்ச்சி என்பவற்றின் பாற்பட்டது. ஆனால், அரசியல் எனப்படுவது நலன்கள் சார்ந்தது. அதில் நலன்களே பிரதானம். அறநெறியோ, நீதியோ அல்ல. எனவே, இப்போதுள்ள அனுதாப அலையானது அந்தந்த நாடுகளின் கொள்கை வகுப்பாளர்களுடைய கொள்கைத் தீர்மானங்களாக பண்பு மாற்றம் செய்யப்பட வேண்டும்.


இவ்விதம் அனுதாப அலையை அல்லது பொதுசன அபிப்பிராயத்தைக் கொள்கைத் தீர்மானமாக மாற்றும் பொறிமுறையே ஈழ்தமிழர்களைப் பொறுத்தவரை ராஜதந்திரப் போராக இருக்க முடியும். தமிழர்கள் தொடர்பில் அத்தகைய கொள்கைத் தீர்மானங்கள் எடுக்கப்படாதவிடத்து அனுதாப அலையானது வழமையான எல்லா அலைகளையும்போல ஒரு கட்டத்தில் வடிந்துபோய்விடும். சிலசமயம் வரும் மார்ச்சுக்குப் பின்னரும் இது நிகழக்கூடும். அவ்விதம் ஈழத்தமிழர்கள் தொடர்பில் கொள்கைத்தீர்மானங்களை எடுப்பதற்குரிய ஒரு Poltical Will – அரசியல் திடசித்தம் - சக்திமிக்க நாடுகளிடம் இல்லை என்று ஒரு தமிழ்க் கட்சியின் தலைவர் இக்கட்டுரையாசிரியரிடம் ஒருமுறை சொன்னார்.

கடந்த நான்காண்டுகளாக மேற்படி அனுதாப அலையைக் கொள்கைத் தீர்மானங்களாக மாற்ற முடியாது போனதற்கு தமிழர் தரப்பில் உள்ள அனைத்து சக்திகளும் பொறுப்பேற்க வேண்டும். இனியும் அதைச் செய்வதாக இருந்தால் இரண்டு விடயப் பரப்புகளின் மீது அதிக கவனம் செலுத்தி நிதானமாகச் சிந்திக்க வேண்டியிருக்கும். அவையாவன.... முதலாவது, கூட்டமைப்புக்கும், டயஸ்பொறாவுக்கும் இடையிலான உறவும், கூட்டமைப்புக்கும் தமிழ் நாட்டிற்கும் இடையிலான உறவும். அதாவது, அனைத்துலக அரங்கு என்று வரும்போது தமிழர்களின் இரு பிரதான பின்தளங்களாகக் காணப்படும் தமிழ் நாட்டில் உள்ள தரப்புகளாலும், டயஸ்பொறாவில் உள்ள தரப்புக்களாலும் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளப் படவேண்டும்.

இப்போதுள்ள நிலைமைகளின்படி டயஸ்பொறாவில் உள்ள தீவிர தேசிய சக்திகள் கூட்டமைப்பை விடவும் தமிழ்த் தேசியக் முன்னணிக்கே நெருக்கமாகக் காணப்படுகின்றன. ஒரு ராஜதந்திர அரங்கை வெற்றிகரமாகக் கையாள்வதென்றால் கூட்டமைப்பானது தமிழ்நாட்டிலும் டயஸ்பொறாவிலும் உள்ள லொபிக் குழுக்களையும் அழுத்தக் குழுக்களையும் நொதியக் குழுக்களையும் நெருங்கிச் செல்ல வேண்டியிருக்கும். தமிழ்நாடும் தமிழ் டயஸ்பொறாவும்தான் தமிழ் ராஜதந்திரக் களத்தில் இருபெரும் கவசங்களும், நெம்புகோல்களுமாகும். எனவே, ஒரு தமிழ் ராஜிய அரங்கெனப்படுவது அதன் மெய்யான பொருளில் தாய் நிலத்தையும் தமிழ்நாட்டையும் டயஸ்பொறாவையும் ஒரு பொதுக்கோட்டில் சந்திக்கச் செய்வதிற்தான் அதன் முதல் வெற்றியைப் பெறமுடியும். இது முதலாவது. இரண்டாவது, அனைத்துலக அனுதாப அலையை ஏன் இதுவரையிலும் ஒரு கொள்கைத் தீர்மானமாக மாற்ற முடியவில்லை என்ற கேள்வியாகும். சில மாதங்களிற்கு முன்பு கனடாவில் பிரான்ஸிஸ் ஹரிசன் தமது நூலை வெளியிட்டு வைத்தபோது ஆற்றிய உரையில் பின்வரும் தொனிப்படக் கூறியிருக்கிறார்.... “இவ்வளவு ஆதாரமான காணொளிக் காட்சிகள், செய்திகள் இன்ன பல ஆதாரங்கள் தமிழர்களிடம் இருந்தபோதும், இந்த உலகத்தின மனச்சாட்சி அசையவில்லையென்றால், தமிழர்கள் வேறு விடயங்களை முயற்சித்துப் பார்க்க வேணடும்...” என்று

எனவே, ஈழத்தமிழ்ர்கள் ஒரு வாய்ப்பாட்டைப் போல ராஜதந்திரப் போர், ராஜதந்திரக் காய் நகர்த்தல்கள் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிராமல் இதுவரையிலுமான ராஜிய முன்னெடுப்புக்கள் ஏன் பிழைத்தன அல்லது எங்கே பிழைத்தன அல்லது அவை மெய்யான பொருளில் ராஜீய வழிமுறைகள் தானா என்பதைக் கண்டுபிடிக்க முற்படவேண்டும். மே 18 இற்குப் பின்னரான உணர்ச்சிப் பெருக்கான அணுகுமுறைகளில் இருந்து விடுபட்டு அதிகமதிகம் அறிவுபூர்வமாக நிலைமைகளை விளங்கிக்கொள்ள முற்படவேண்டும். ஆங்கிலத்தில் ஒரு முதுமொழி உண்டு. “உங்களுடைய கனவிற்கும் யதார்த்ததிற்கும் இடையிலுள்ள தூரமே செயற்பாடு” என்று. யதார்த்தத்தை நோக்கி கனவை வளைப்பது ராஜதந்திரம் அல்ல. அதற்குப் பெயர் சரணாகதி. மாறாக கனவை நோக்கி யதார்த்தத்தை வளைப்பதே ராஜதந்திரமாகும். அப்படி கனவை நோக்கி யதார்த்தத்தை வளைக்கத் தவறின் இன்றைய தேர்தல் வெற்றிகள் நாளைய ராஜதந்திரத் தோல்விகளாக மாறவும் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தந்தையே உன் கனவு
நனவாகின்றது

# மதில்களில் பதிந்தவர்கள் மனங்களில் பதியவில்லை

சுவர்களில் இடம் பிடித்தவர்கள் பலரும் மக்கள் மனங்களில் இடம்பிடிக்கவில்லை. வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கு மாகாண சபை கதிரைகளில் இடம் கிடைக்கவில்லை. கட்சி தாவி குத்துக்கரணம் அடித்தோர் மக்களால் இனம் கண்டு ஒதுக்கப்பட்டனர். அரச படையினரின் ஆதரவைப் பெற்றவர்களின் பசப்பு வார்த்தைகளுக்கு மக்கள் விலை போகவில்லை. அரச ஊழியர்களைப் பயன்படுத்தியும் வேலைதேடும் இளையோரை வழி தவற வைக்க முயன்றவர்களும் தமது போலி வேடங்களை களைவதற்கான ஓர் சந்தர்ப்பமாக மக்கள் தேர்தல் முடிவுகளால் பதில் அளித்துள்ளார்கள். சண்டித்தன அரசியலுக்கு சாவு மணி அடித்தனர் மக்கள்.

தவராசா றெமிடியஸ் டிவகலாலா அங்கஜன் சிராஸ் செவ்வேள் பொன்னம்பலம் அகிலன் போன்றவர்களது சுவரொட்டிகளும் துண்டுப்பிரசுரங்களும் பத்திரிகை விளம்பரங்களும் தம்மைத் தாமே ஏமாற்றும் வேலை என உணர மறுத்ததன் விளைவு மக்கள் அவர்களை மறுதலித்துள்ளனர்.

## மாகாணி...

அள்ளித் தந்த இனிப்புக்களாக அமைந்தன.

சலுகையா? உரிமையா? என எழுந்த கேள்விக்கு உயிரை இழந்தோம் உடமை இழந்தோம் உணர்வை இழக்கவில்லை உரிமையும் இழக்கோம் என தெட்டத் தெளிவாக தங்கள் பதிலை தென்னிலங்கைக்கும் சர்வதேசத்துக்கும் உரத்துச் சொல்லியிருக்கின்றார்கள் தமிழர்கள்.

இந்த முடிவுகளை தமிழர்களின் ஏகோபித்த முடிவாக ஏற்றுக்கொண்டு சர்வதேசம் தமிழ்மக்களின் பிரச்சனைகளுக்கு நியாயமான தீர்வினைப் பெற்றுத்தரும் எனும் நம்பிக்கையில் காத்திருக்கின்றனர் தமிழ்மக்கள்.

## தேர்தல்...

வெளியானதை அடுத்து கருத்து தெரிவித்த அவர், இந்த அமோக வெற்றி தமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்துள்ளதாகவும், அதேவேளை வடபகுதி மக்கள் தம்வசம் பாரிய பொறுப்பை ஒப்படைத்துள்ளார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாகாண சபைத் தேர்தல் வெற்றி குறித்து கருத்து வெளியிட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா. சம்பந்தன், மக்கள் சமாதானத்துக்காக வாக்களித்துள்ளார்கள் என்றும், அவர்கள் தமது எண்ணங்களை வாக்குகளில் பிரதிபலித்துள்ளார்கள் என்றும், அவர்களது தீர்ப்புக்கு ஏற்ப தாம் நடப்போம் என்றும் கூறினார்.

## யாழ்...

யாழ்வரும் இராஜதந்திரிகள் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள் யாழ் ஆயரைச் சந்தித்து அவரது கருத்தைச் செவிமடுத்து முன்னிலைப்படுத்துபவராகவும் செயற்பட்டுள்ளார். குறிப்பிடத்தக்கது.

சர்வமத தலைவர்களால் நன்கு மதித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட இவர் ஏனைய தலைவர்களிற்கு உதாரணமாக விள்ங்கியவர். தனது 75வது வயதில் ஓய்வுபெற தீர்மானித்துள்ளார். பதவி மோகத்திற்கு பல்வேறு குத்துக் கரணங்களுடன் தம் கதிரைகளில் மிகக்கவனமாக இருக்கும் அரசியல் தலைவர்களிற்கு முன்மாதிரியாக தனது பணிக்காலத்தை வரையறை செய்து, குறித்த காலத்தில் ஓய்வு பெற வத்திக்கானுக்கு விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. புதிய ஆயரிற்கான தேர்வுகள் திருச்சபையின் தலைமையகத்தால் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதனுடன்
கிளிநொச்சி மாவட்டத்தின்
வெற்றியாளர்கள்

ப.அரியரத்தினம்
த.குருகுலராஜா
சு.பசுபதிப்பிள்ளை

# தேர்தல் வெற்றி...

**தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு ஒர் அன்பு மடல் !!!**

1988 ம் ஆண்டுக்கு பின்னர் 2 வது தோர்தலில் ஆசனங்களில் 30 ஆசனங்களைப் பெற்று நாம் அமோக ஆதரவு பெற்று இருக்கின்ற இன்றைய தமிழ்அரசியலில் பணம் , பதவி, மற்றும் இதர வாய்ப்புளுக்கு சோடை போகாத அரசியல்வாதிகளாக காணஎண்ணுகிறோம் ஒற்றுமை, கொள்கை, இனத்துக்கான போராட்டம், பணம் பதவிகளுக்கு சோடை போகாத அரசியல், அச்சமில்லா விமர்சனம் என்று இன்றைய அரசியலில் ஒரு முன் மாதிரியை எமது தமிழ் அரசியல் கட்சியான தமிழ் தேசிய கூட்டமைப்பை நாம் பெரும் அவாவுடன் எதிர்பார்கின்றோம் மாறாக சுயநல இலாபநோக்கம் கருதி தமது செயற்பாடுகளை முன்னெடுக்க எத்தனிப்பார்கள்லெனின் நாம் தகுந்த பாடம் கற்பிக்க பின்னிற்கமாட்டோம்.........

தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு மக்களாகிய நாம் ஓர் நிழல்........

கருணாநிதி
யாழ் பல்கலைக்கழக மாணவன் - அரசியற்துறை

கூட்டமைப்பு இந்தமுறையாவது தமிழர்களுக்கான குரல ஓங்கிக்கொடுத்தால் நல்லது...வாக்களிக்கும் மக்களில் பலர் அரசாங்க வெல்லக்கூடாது என்பதற்காக ஓட்டளிக்கின்றனவே தவிர கூட்டமைப்பில் இருக்கும் நம்பிக்கையில் அல்ல!!! ஏன் அவர்கள் அரசாங்கம் அல்லாத வேறுகட்சிகளுக்கோ அல்லது சுயேட்சைக்குழுக்களுக்கோ வாக்களிக்கலாமே என நீங்கள் கேட்கலாம், அது அப்படியல்ல தமிழர்களின் ஒற்றுமையை உலகிற்குக்காட்டவே நாம் கூட்டமைப்பிற்கு ஓட்டுப்போடுகின்றோம் கூட்டமைப்பு தன் கடமையைத் தட்டிக்கழிக்க முற்ப்பட்டால் வேறு ஒரு சரியான தலைமை உருவாகும் போது தமிழ் மக்கள் அனைவரும் அதன்பின் ஒன்றிணைவோம் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை!!! எமக்குத்தேவை விடிவே தவிர விளக்கங்கள் அல்ல, விடிவைத்தாருங்கள் இயலாதென்றால் விலக்கப்படுவீர்கள்!!

ம.ஜான்குமார்
டுபாயிலிருந்து

## விருப்பு வாக்கு விபரம்

### முல்லைத்தீவு மாவட்டம்

**இ.த.க**
அன்ரனி ஜெகநாதன்
எஸ்.சிவமோகன்
என்.ரவிகரன்
எஸ்.கனகசுந்தசுவாமி

**ஐ.ம.சு.கூ**
அகமட் லெப்பை காசிம்

### வவுனியா மாவட்டம்

**இ.த.க**
பி.சத்தியலிங்கம் -19656
கே.லிங்கநாதன் - 11901
எம்.தியாகராஜா - 11681
எஸ்.இந்திரராஜா - 11535

**ஐ.ம.சு.கூ**
தர்மபால செனவிரட்ண - 5148
எ.ஜெயதிலக - 4806

### கிளிநொச்சி மாவட்டம்

**இ.த.க**
ப.அரியரத்தினம் - 27264
த.குருகுலராஜா - 26427
சு.பசுபதிப்பிள்ளை - 26132

**ஐ.ம.சு.கூ**
தவநாதன் - 3753

### மன்னார் மாவட்டம்

**இ.த.க**
எஸ்.பிறிமூஸ் சிறாய்வா
பாலசுப்பிரமணியம் டெனிஸ்
என்.குணசீலன்

**ஐ.ம.சு.கூ**
றிப்பகான் பதியுதீன்

**ஸ்ரீ.மு.கா**
றயஷ்

முதலாம் குறுக்குவீதி, மணிப்புரி யாழ்ப்பாணத்திலுள்ள யூட்பிறைனர் அன்ரன் றஞ்சித்குமார் அவர்களால் 22.09.2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

